FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)"

முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318742

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti Corruption Thoothukudi** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **02/2026** Date: நாள் **05.06.2026**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் **On 04.06.2026 Before 15.40 hrs** Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **05.06.2026** Time : நேரம் **15.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **05.06.2026** Time : நேரம் **15.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Ottapidaram Sub Registrar Office Thoothukudi District About 25 Kms North**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **திரு.K.முருகன்** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **காளிமுத்து**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Tahsildar (g) Address : முகவரி Election - 2, District Collectorate, Thoothukudi

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.S.Prabhakar, aged 37/2026, S/o Tr.E.Sundarraj, Assistant, O/o the Thiruchendur Sub-Registry, i/c Sub Registrar, Ottapidaram Sub Registry, Thoothukudi District and 5 anothers.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

V.Arunalakshmi Inspector of Police

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

5/6/26

5.6.2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court **05.06.2026 at 17.00 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் **S. PETER PAUL DURAI**
Rank: நிலை ..... No. எண் .....

Dy. Supdt. of Police
V & AC,
Moolthukudi Detachment

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.02/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

1. Tr.S.Prabhakar, aged 37/2026, S/o Tr.E.Sundarraj, Assistant, O/o the Thiruchendur Sub-Registry, i/c Sub Registrar, Ottapidaram Sub Registry, Thoothukudi District. 2. Tr.S.Paulraj, aged 56/2026, S/o Tr.Sivan, Office Assistant, Ottapidaram Sub-Registry, Thoothukudi District. **Private individuals :** 3. Tmt.S.Selva Venkatapriya, aged 35/2026, D/o Tr.S.Shenbagam, Data Entry Operator, Ottapidaram Sub-Registry, Thoothukudi District. 4. Tmt.M.Seethalakshmi, aged 40/2026, D/o Tr.Mariappan, No.2/114-1, V.O.C Street, Ottapidaram, Thoothukudi District. 5. Tr.D.Iyyamperumal, aged 57/2026, S/o Tr.Diraviam, No.2/167, Keela Theru, Ottapidaram Taluk, Thoothukudi District. (Document Writer) 6. Tr.M.Balamurugan, aged 56/2026, S/o Tr.Muniyandi, Puthupacheri, Puthiamputhur (Via), Ottapidaram Taluk, Thoothukudi District. (Document Writer)	தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திரு.S.பிரபாகர் பத்திரம் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்யவரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்காக அவர்களிடமிருந்தும், ஆவண எழுத்தர்கள் மூலமாகவும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 04.06.2026 ஆம் தேதி மதியம் 15.40 மணி முதல் 21.30 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.K.முருகன், துணை வட்டாட்சியர் (தேர்தல்-2), துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். அவர்களுடன் ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.K.முருகன், அவர்கள் கொடுத்த புகார் மனுவை 05.06.2026-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது பிற்பகல் 15.00

மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/2026, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018–ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர், K.முருகன், துணை வட்டாட்சியர் (தேர்தல் - 2), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி. பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலக திடீர் தணிக்கை செயல்முறைகள் - சட்ட மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திரு.S.பிரபாகர் பத்திரம் பதிவு செய்யவரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவுசெய்வதற்காக அவர்களிடமிருந்தும், ஆவண எழுத்தர்கள் மூலமாகவும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திலிருந்து 04.06.2026-ம் தேதி மதியம் சுமார் 14.15 மணிக்கு புறப்பட்டு மதியம் சுமார் 15.00 மணிக்கு ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகம் அருகே சென்று எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.பீட்டர் பால்துரை மற்றும் பெண் காவல் ஆய்வாளர் திருமதி.அனிதா மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் இரகசியமாக கண்காணித்ததில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்தும் பத்திர எழுத்தர்கள் மூலமாகவும் பத்திரங்கள் பதிவு செய்வதற்கும், பத்திரப் பதிவு சம்பந்தமான ஆவணங்கள் வழங்குதல் மற்றும் இதர அலுவல்கள் செய்வதற்கும் ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 04.06.2026 மதியம் சுமார் 15.40 மணிக்கு ஓட்டப்பிடாரத்தில் ஓட்டப்பிடாரம்-குறுக்குச்சாலை ரோட்டில் ரோட்டின் வடபுறம் தெற்கு பார்த்து அமைந்துள்ள ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் சென்று திடீர் தணிக்கை செய்ததில் அந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.S.பால்ராஜ் என்பவரது அலுவலக மேஜையின் இடது பக்க டிராயரில் பேப்பர்களுக்கு இடையே மடித்த நிலையில் தனித்தனியாக ஆங்காங்கே காணப்பட்ட பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.6,700/- காணப்பட்டது. அது குறித்து திரு.பால்ராஜிடம் விளக்கம் கேட்க அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மேற்படி பணம் அவர் லஞ்சமாக வசூல் செய்த பணம் என்று கருதி **ரூ.6,700/-ம்,** மேலும், அந்த அலுவலகத்தில் Data

Entry Operator ஆக பணிபுரிந்து வரும் திருமதி.செல்வ வெங்கடபிரியா என்பவரை சோதனை செய்த போது அவரது பச்சைநிற கைப்பையினுள் ஆங்காங்கே தனித்தனியாக வைத்திருந்த பணம் ரூ.9,000/- குறித்து விளக்கம் கேட்க அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மேற்படி பணம் அவர் லஞ்சமாக வசூல் செய்த பணம் என்று கருதி **ரூ.9,000/-ம்,** அலுவலக கணிணி அறையை சோதனை செய்த போது அந்த அறையில் TNPL ஜெராக்ஸ் கவருக்குள் இரண்டு கத்தையாக மடித்த நிலையில் பணமும், மற்றொரு காக்கி கவரும் காணப்பட்டது. கத்தையாக காணப்பட்ட பணத்தை எண்ணிப்பார்த்ததில் ரூ.5,000/-ம், காக்கி கவரை பிரித்து பார்த்த போது அதனுள் ரூ.15,000/- ஆக மொத்தம் ரூ.20,000/- காணப்பட்டது. அது குறித்து சார்பதிவாளர் திரு.பிரபாகரிடம் கேட்ட போது அலுவலகத்தில் பணி செய்து கொண்டிருந்த வெளிநபரான திருமதி.சீதாலெட்சமி என்பவர் தானாக முன்வந்து மறைத்து வைத்ததாக தெரிவித்தார். அந்தப் பணம் குறித்து கேட்ட போது முன்னுக்குப் பின் முரணாக தெரிவித்ததாலும், சந்தேகத்திற்கு இடமான வகையில் இருந்ததாலும் லஞ்சமாக வசூல் செய்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.20,000/-** மற்றும் அதனுடன் இருந்த காக்கி கவர், TNPL ஜெராக்ஸ் கவர் ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேலும், அந்த அலுவலக வளாகத்திற்கு வெளியே சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த நபரை ஏற்கனவே அழைத்து வந்து அமர வைக்கப்பட்டிருந்த ஆவண எழுத்தர் திரு.அய்யம்பெருமாள் (ஆவண எழுத்தர்) என்பவரை சோதனை செய்ய சட்டையின் உள் மற்றும் வெளி பாக்கெட்டில் கத்தையாக காணப்பட்ட பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்ததில் ரூ.7,500/-ம், அவரது இடுப்பு வேஷ்டியில் சுருட்டிய நிலையில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.50,000/- ஆக மொத்தம் **ரூ.57,500/-** காணப்பட்டது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லாமலும், முன்னுக்குப் பின் முரணாக இருந்ததாலும், சந்தேகத்திற்கு இடமான வகையில் காணப்பட்டதாலும் மேற்படி தொகை லஞ்சமாக கொடுக்க வைத்துள்ள பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.57,500/-** கைப்பற்றப்பட்டது. மேலும், அதே போன்று அலுவலக வளாகத்திற்கு வெளியே சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த மற்றொரு நபரான ஏற்கனவே அழைத்து வந்து அமர வைக்கப்பட்டிருந்த ஆவண எழுத்தர் திரு.பாலமுருகன் (ஆவண எழுத்தர்) என்பவரை சோதனை செய்ய சட்டைப் பாக்கெட்டில் 2 துண்டுச் சீட்டுகளும், வங்கி செலுத்துச் சீட்டு 1 எண்ணமும் காணப்பட்டது. அந்த 2 துண்டுச் சீட்டுகளிலும் சில பெயர்கள் மற்றும்

தொகைகள் எழுதப்பட்டிருந்தது. அது குறித்து கேட்ட போது பத்திரங்களுக்கு உள்ள பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் எங்கு உள்ளது என்று கேட்ட போது தனது அலுவலத்தில் உள்ளது என்று கூறி அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு தகவல் சொல்லி எடுத்து வரச் சொன்னதின் பேரில் அவரது மனைவி திருமதி.விமலா செல்வி ஒரு கருப்பு நிற பையை எடுத்து வந்து ஆஜர் செய்தார். அதனை சோதனை செய்த போது பச்சை நிற பாலிதீன் கவரினுள் பொதிந்த நிலையில் ரூ.88,500/-ம், தனித்தனி கத்தைகளாக ரூ.17,000/- மற்றும் ரூ.1,300/- என ஆக மொத்தம் ரூ.1,06,800/- பணமும், 13 துண்டுச் சீட்டுகளும் காணப்பட்டது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லாமலும், முன்னுக்குப் பின் முரணாக இருந்ததாலும், சந்தேகத்திற்கு இடமான வகையில் காணப்பட்டதாலும் மேற்படி தொகை லஞ்சமாக கொடுக்க வைத்துள்ள பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.1,06,800/-** மற்றும் துண்டுச் சீட்டுகள் மற்றும் பச்சைநிற பாலிதீன் கவர் ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது மொத்தம் (ரூ.6,700/- + ரூ.9,000/- + ரூ.20,000/- + ரூ.57,500/- + ரூ.1,06,800/- =) ரூ.**2,00,000/-ம்,** TNPL ஜெராக்ஸ் கவர் - 1, காக்கி கவர் - 1, பச்சைநிற பாலிதீன் கவர் - 1, வங்கி செலுத்துச் சீட்டு - 1, துண்டுச் சீட்டுகள் - 15 எண்ணம் ஆகியவை நேற்று 04.06.2026-ம் தேதி மதியம் சுமார் 15.40 மணி முதல் இரவு 21.30 மணிவரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனைய்ின்போது ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இருந்த சார்பதிவாளர் திரு.சு.பிரபாகர், அலுவலக உதவியாளர் திரு.சி.பால்ராஜ், Data entry operator திருமதி.செ.செல்வ வெங்கடபிரியா மற்றும் தனிநபர்கள் திருமதி.மா.சீதாலெட்சுமி, திரு.தி.அய்யம்பெருமாள் மற்றும் திரு.ம.பாலமுருகன் மற்றும் சில தனி நபர்களிடமும் ஆகிய அனைவரிடமும் எனது முன்னிலையில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது அலுவலகத்தின் தாமத வருகைப் பதிவேடு, வருகை பதிவேட்டின் தொடர்குறிப்பு பதிவேடு, இயக்க பதிவேடு 2026 மற்றும் தனி நபர் பணம் கையிருப்பு பதிவேடு 2026 ஆகியவையும் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,00,000/- மற்றும் செயல்முறையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைத்து ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் திரு.**S.பிரபாகர்** மற்றும் அலுவலக உதவியாளர் திரு.சி.பால்ராஜ், Data entry operator திருமதி.செ.செல்வ வெங்கடபிரியா மற்றும் தனிநபர்கள் திருமதி.மா.சீதாலெட்சுமி,

திரு.தி.அய்யம்பெருமாள் (ஆவண எழுத்தர்) மற்றும் திரு.ம.பாலமுருகன் (ஆவண எழுத்தர்) ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 05.06.2026 (K.Murugan), Deputy Tahsildar (Election – 2), District Collectorate, Thoothukudi. Sir, Received the complaint on today (05.06.2026) at 15.00 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.02/2026, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 05.06.2026, S.Peter Paul Durai, Deputy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.K.முருகன் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.V.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

5.6.2026

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi